தினமணி

"இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகள் மாற வேண்டும்'

First Published : 15 Jul 2012 12:23:07 PM IST

கரூர், ஜூலை 14: ரசாயன உரங்களைப் பயன்படுத்துவதை கைவிட்டு, விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாற வேண்டும் என்றார் பெல்ஜியம் நாட்டின் சாவேஸ் தொண்டு நிறுவனத்தின் தலைவி மீகே.

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், வினோபாஜிபுரத்தில் சேவாப்பூர் இன்ப சேவா சங்கம் சார்பில் அண்மையில் நடைபெற்ற அன்னை லியா சமுதாயக் கல்லூரி மற்றும் இயற்கை உயிராற்றல் வேளாண் பள்ளியை திறந்துவைத்து அவர் மேலும் பேசியது:

இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்காக பூமி தானம் திட்டம் இந்தப் பகுதியில் கொண்டுவரப்பட்டு 500 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய ஒவ்வொரு குடும்பத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலை தற்போது இந்த கிராமத்தில் மாறியுள்ளது.

இந்தப் பகுதி மக்களுக்காக வேளாண் கல்லூரி ஆரம்பிப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

விவசாயிகள் தங்களின் நிலங்களில் ரசாயன உரங்களைப் பயன்படுத்தி வருவதை கைவிட்டு, இயற்கை விவசாயத்துக்கு மாற வேண்டும்.

இயற்கை விவசாயத்தை மேற்கொண்டால் விவசாயிகளின் நிலங்களில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. விவசாயிகளின் பொருளாதார நிலை மேம்படும் என்றார் மீகே.

விழாவுக்கு இன்ப சேவா சங்கத்தின் தலைவர் குருசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் திருநீலகண்டன், பொதுக்குழு உறுப்பினர் நல்லையம் பெருமாள், கிராமசபைத் தலைவர் சிவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் பொருளாளர் ஜெயகரன், அகில இந்திய உயிர்சக்தி வேளாண்மை கழகத்தின் செயலர் லூக்காஸ், சென்னை, ஐ.சி.ஆர்.டி.சி.இ. இயக்குநர் சேவியர் அல்போன்ஸ் ஆகியோர் பேசினர்.

விழாவில் ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவில் இன்ப சேவா சங்கச் செயலர் பெருமாள் நன்றி கூறினார்.

## விவசாயிகள் ஆண்டு முழுவதும் வருமானம் பெற யோசனை

First Published : 15 Jul 2012 12:18:07 PM IST

திருச்சி, ஜூலை 14: விவசாயிகள் ஆண்டு முழுவதும் வருமானம் பெற விவசாயத்துடன் கூடிய துணைத் தொழில்களை மேற்கொள்ள கூட்டுப் பொறுப்புக் குழுக்களைத் தொடங்க வேண்டும் என்றார் லால்குடி சரக கூட்டுறவு துணைப் பதிவாளர் நா. திலீப்குமார்.

மண்ணச்சநல்லூரில் அண்மையில் நடைபெற்ற மண்ணச்சநல்லூர், மணவாளம், பாச்சூர், பனமங்கலம், கிளியநல்லூர் ஆகிய காவிரிப் பாசனப் பகுதிகளில் செயல்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் பங்கேற்ற கலந்தாய்வு மற்றும் உறுப்பினர் கல்வித் திட்டக் கூட்டத்தில் அவர் பேசியது:

காவிரிப் பாசனப் பகுதியில் நீர்வரத்து இல்லாததால் இருப்பிலுள்ள நீர் ஆதாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மாற்று வழிகளில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி பயிர் சாகுபடி செய்ய வேண்டும்.விவசாயத்தை மட்டும் சார்ந்திருக்காமல் துணைத் தொழில்களான கறவை மாடு வளர்த்தல், வெண் பன்றி வளர்த்தல், நாட்டுக் கோழி பண்ணை அமைத்தல், மீன் பண்ணை அமைத்தல் போன்ற தொழில்களைச் செய்வதன் மூலம் ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்டலாம். இதற்காக கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்க வேண்டும். இந்தக் குழுக்களுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் முதலீட்டுக் கடனாக மத்திய காலக் கடன் வழங்கப்படுகிறது' என்றார் திலீப்குமார். கூட்டத்துக்கான ஏற்பாடுகளை செயலர்கள் வில்லாளன், பாலு, ரெங்கராஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## "ரூ. 120 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு'

First Published : 15 Jul 2012 01:15:42 PM IST

பெரம்பலூர், ஜூலை 14: பெரம்பலூர் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்கங்கள் மூலம் ரூ. 120 கோடியில் பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் அருகேயுள்ள வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விவசாயப் பணிகள் மேற்கொள்வது, வங்கிக் கடன் பெறுவது, விவசாயம் சார்ந்த தொழில்கள் மூலம் விவசாயிகளைப் பயனடையச் செய்வது குறித்து சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்துக்கு தலைமை வகித்த ஆட்சியர் மேலும் பேசியது:

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் தங்களது பொருள்களை ஏல முறையில் விற்பனை செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து, பல்வேறு மாவட்டங்களைச்

சேர்ந்த வியாபாரிகள் அதிக விலைக்கு ஏலம் எடுக்கின்றனர். பருத்தி விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பருத்தி விவசாயத்தில், அதிக லாபம் ஈட்டுவதற்காக நீண்ட இழைப் பருத்தி சாகுபடி செய்ய தேவையான ஆலோசனைகளை வழங்க ஜூலை 21-ம் தேதி வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் விளக்கக் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் கடந்த ஆண்டு ரூ. 40 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் ரூ. 120 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் வட்டியில்லாப் பயிர்க் கடனை, நிகழாண்டு 50 ஆயிரம் விவாசயிகளுக்கு வழங்க வேண்டுமென கூட்டுறவு வேளாண்மை கடன் சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை கடன் பெறாத விவசாயிகள், தங்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகப் பதிவு செய்து, பயிர்க் கடன் பெற்று சிறந்த முறையில் விவசாயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இயற்கையால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, பயிர்க் காப்பீடு அவசியம். வாங்கும் விதைகளுக்கு கட்டாயம் ரசீது பெற வேண்டும். அப்போதுதான் பயிர் விளைச்சலில் பாதிப்புக்குள்ளாகும் போது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நஷ்டஈடு பெற முடியும். அனைத்து உரங்களும் கூட்டுறவு வேளாண் விற்பனை சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

வேப்பந்தட்டை வட்டாரத்தில் உள்ள 68 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 7,126 பேரிடமிருந்து நாள் ஒன்றுக்கு 35,632 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது என்றார் ஆட்சியர்.

வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் க. ஜயலட்சுமி, தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண் ஆராய்சி மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, தோட்டக்கலைத் துணை இயக்குநர் செப்ந்தர்ராஜன், வேளாண்மை உதவி இயக்குநர் எ. கீதா, வேளாண் அலுவலர் ஜயக்குமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

"கடலாடியில் கால்நடை மருத்துவமனை'

First Published : 15 Jul 2012 11:44:32 AM IST

போளூர், ஜூலை 14: கடலாடி ஊராட்சியில் ரூ. 23 லட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும் என்று கலசப்பாக்கம் எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

போளூரை அடுத்துள்ள கடலாடியில் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 72 பேருக்கு விலையில்லா மடிக் கணினி மற்றும் 137 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்கி அவர் மேலும் பேசியது: கடலாடி ஊராட்சியில் 20 பயனாளிகளுக்கு பசுமை வீடு வழங்கப்பட்டுள்ளது.

ரூ.1 கோடியே 86 லட்சத்தில் காவலர் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. சாலை மற்றும் சிமென்ட் சாலை அமைக்க ரூ.30 லட்சமும், கலசப்பாக்கம் ஒன்றிய நிதியிலிருந்து ரூ. 9 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கம் மூலம் 24 பேருக்கு கடன் தரப்பட்டுள்ளது. கடலாடி அருகே உள்ள பச்சையம்மன் கோயிலுக்கு ரூ.15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை கடலாடி ஊராட்சிக்கு தமிழக அரசு ரூ.4 கோடி ஒதுக்கியுள்ளது என்றார்.

விழாவில், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் நைனாக்கண்ணு, கலசப்பாக்கம் ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயராமன், ஊராட்சித் தலைவர் அலமேலு சாமிநாதன், தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் ரேணுகா மற்றும் அதிமுக பிரமுகர்கள் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**கடன்: பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து**

ஜூலை 16,2012,07:35



தமிழகத்தில், விளை பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், பொது துறை வங்கிகள், நடப்பு 2012-13ம் நிதியாண்டில், வேளாண் துறைக்கு, 41 சதவீதம் கூடுதலாக, அதாவது, 51

ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளன.
கடன் இலக்கு:விவசாயிகளுக்கு வழங்கும் கடன் அதிகரித்துள்ளதால், வேளாண்துறைக்கான கடன் ஒதுக்கீட்டை வங்கிகள் உயர்த்தியுள்ளன. வங்கிகள் நிர்ணயித்துள்ள கடன் இலக்கில், விவசாயிகளுக்கான கடன் 60 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.இது குறித்து, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் எம்.நரேந்திரா கூறுகையில்,"தமிழக அரசின் தொலைநோக்கு செயல் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், மாநில வேளாண் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வங்கி உறுதி பூண்டுள்ளது' என்று தெரிவித்தார்.
பொது துறை வங்கிகள்:பொது துறை வங்கிகள், சென்ற 2011-12ம் நிதியாண்டில் தமிழக வேளாண்துறைக்கு, 36 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளன. நடப்பாண்டில், இது, 51 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. வேளாண்துறையை ஊக்கப்படுத்த, முதலீடுகள் சார்ந்த கடன்களை இலக்காக கொண்டு வங்கிகள் செயல்படுகின்றன. சென்ற ஆண்டு, 3,000 கோடி ரூபாய் அளவிற்கு இவ்வகை கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இது, நடப்பு நிதியாண்டில், 25 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கை கட்டாயம் எட்ட வேண்டும் என, வங்கிகளுக்கு உத்தரவிடப்படவில்லை. அறிவுறுத்தல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என, நரேந்திரா மேலும் கூறினார்.
மாநில வங்கிகள் குழுவின் அறிக்கைப்படி, 82 லட்சம் விவசாயிகளில் 77 லட்சம் பேர் கிசான் கிரெடிட் கார்டு (கே.சி.சி.,) வாயிலாக கடன் பெற்றுள்ளனர்.தமிழகத்தில், விவசாயத்திற்கான பாசன நீர் வளம் குறைவாகவே உள்ளது. தேசிய நீர் வளத்தில், தமிழகத்தின் பங்களிப்பு மூன்று சதவீதம் என்ற அளவிற்கே உள்ளது.
தரிசு நிலம்:கடந்த 2005-06ம் நிதியாண்டு நிலவரப்படி 7.59 லட்சம் ஹெக்டேராக இருந்த தரிசு நிலம் 2009-10ம் நிதியாண்டில் 11.17 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.அதே சமயம், இதே ஆண்டுகளில், நிகர பயிரிடும் பரப்பளவு 52.44 லட்சம் ஹெக்டேரில் இருந்து 48.92 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.
தமிழகத்தில், நீர் பாசன பரப்பளவு குறைந்து வருகிறது. கடந்த 2008-09ம் நிதியாண்டில், 29.31 லட்சம் ஹெக்டேராக இருந்த நீர் பாசன பரப்பு, 2009-10ம் நிதியாண்டில் 28.64 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது. இந்த நீர் பாசன பரப்பில், 2,239 கால்வாய்கள், 78 அணைக்கட்டுகள், 41,262 குளங்கள், 18.36 லட்சம் கிணறுகள் ஆகியவை அடங்கியுள்ளன.
தனி நபர் வருவாய்:தமிழக அரசு, வேளாண்பொருட்களின் உற்பத்தியை 35 சதவீதம் அதிகரிக்கவும், அடுத்த ஐந்து ஆண்டுகளில், விவசாயிகளின் தனி நபர் வருவாயை மூன்று அல்லது நான்கு மடங்கு உயர்த்தவும் இலக்கு நிர்ணயித்துள்ளது.வேளாண்துறையில், மேம்பட்ட, நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பது, ஒருங்கிணைந்த பண்ணை விவசாய மேம்பாட்டுக்கான திட்டங்களை செயல்படுத்துவது உள்ளிட் பல்வேறு

நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. இதற்காக, நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டில், 3,805 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது, இதுவரை இல்லாத மிகப் பெரிய அளவிலான ஒதுக்கீடு என்பது குறிப்பிடத்தக்கது.

**தேயிலை உற்பத்தியில் சரிவு**

ஜூலை 16,2012,00:44



கோல்கட்டா:நடப்பாண்டின் ஜனவரி முதல் மே வரையிலான முதல் ஐந்து மாதங்களில், தேயிலை உற்பத்தி, 21.62 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியைவிட, (24.36 கோடி கிலோ) 11 சதவீதம் குறைவாகும் என, தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டு காலத்தில், வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 14.67 கோடி கிலோவிலிருந்து, 12.88 கோடி கிலோவாக குறைந்துள்ளது. தென் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 9.68 கோடி கிலோவிலிருந்து, 8.70 கோடி கிலோவாக குறைந்துள்ளது.சென்ற மே மாதத்தில், தேயிலை உற்பத்தி, 7.25 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

இது, முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியைவிட, (7.62 கோடி கிலோ) 5 சதவீதம் குறைவாகும்.மதிப்பீட்டு காலத்தில், வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 5.24 கோடி கிலோவிலிருந்து, 4.96 கோடி கிலோவாக குறைந்துள்ளது. தென் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 2.44 கோடி கிலோவிலிருந்து, 2.28 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

**தக்காளி விலை மீண்டும் வீழ்ச்சி**

ஜூலை 16,2012,00:42



கிருஷ்ணகிரி: கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் ஒடிசா மாநிலங்களில், தமிழக தக்காளிக்கு வரவேற்பு குறைந்துள்ளது. இதனால் தக்காளி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 9,773 ஹெக்டேரில் காய்கறி சாகுபடி நடைபெறுகிறது. இவற்றில், 5,000 ஹெக்டேரில் தக்காளி சாகுபடி நடக்கிறது. குறிப்பாக, ஓசூர் தாலுகாவில், 4,000 ஹெக்டேரில் தக்காளி சாகுபடியாகிறது.சந்தைகள்:இம்மாவட்டத்தில், ராயக்கோட்டை, பத்தலப்பள்ளி ஆகிய இரு இடங்களில் மிகப்பெரிய தினசரி தக்காளி சந்தைகள் செயல்படுகின்றன. ராயக்கோட்டைக்கு நாள்தோறும், 5,000 டன்னும், பலத்தலப்பள்ளிக்கு, 2,000 டன் தக்காளியும் வருகிறது.அவற்றை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, கோல்கட்டா, ஒடிசா, விஜயவாடா சந்தைகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

ஓசூர் தாலுகாவில், தென்மேற்கு பருவமழை தாமதமாகி வருவதாலும், நிலத்தடி நீர் மட்டம் வறண்டதாலும், தக்காளி மகசூல் குறைந்துள்ளது. அதனால், தக்காளி விலை, "கிடுகிடு'வென உயர்ந்தது. கடந்த வாரம், ஒரு கிரேடு தக்காளி, 600 ரூபாய் வரை விலை போனது. சில்லரையில், ஒரு கிலோ தக்காளி, 25 ரூபாய் வரை விற்பனையானது.

தற்போது, கர்நாடகா, ஆந்திரா, ஒடிசா மற்றும் கேரளாவில், திடீரென தக்காளி விற்பனை மந்தமடைந்துள்ளது. அம்மாநிலங்களில், தக்காளி உற்பத்தி அதிகரித்து, சந்தைக்கு வரத் துவங்கியுள்ளதால், கிருஷ்ணகிரி மாவட்ட தக்காளிகளுக்கு வரவேற்பு குறைந்துள்ளது. தற்போது, ஒரு கிரேடு ஹைபிரீடு, நாட்டு தக்காளி விலை, 320 ரூபாயாக சரிவடைந்துள்ளது.

பருவ மழை:இது குறித்து, செட்டிப்பள்ளியை சேர்ந்த விவசாயி நரசிமய்யா கூறியதாவது:ஓசூர் பகுதியில், நடப்பாண்டு பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டது. அதனால், ஆழ்துளை

கிணறுகள், விவசாய கிணறுகளில் தண்ணீர் இல்லாமல், தக்காளி உற்பத்தி குறைந்தது. அதே சமயம், வெளிமாநிலங்களில் தக்காளி உற்பத்தி இல்லாததால், கிருஷ்ணகிரி மாவட்ட தக்காளிக்கு கிராக்கி அதிகரித்தது. விலையும் உயர்ந்தது.

தற்போது, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் ஹைபிரீடு தக்காளி உற்பத்தி அதிகரித்து, சந்தைகளுக்கு வரத் துவங்கியுள்ளதால், தமிழக தக்காளிகளுக்கு வரவேற்பு குறைந்து, விலை சரிவடைந்துள்ளது. இந்தநிலையிலும், தற்போது சில்லரை விற்பனை கடைகளில், கிலோ, 20 முதல், 30 ரூபாய் வரை தக்காளி விற்பனையாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## கோதுமை கொள்முதல் 3.81 கோடி டன்னாக உயர்வு

ஜூலை 16,2012,00:15



புதுடில்லி:நடப்பு பருவத்தில், சென்ற வெள்ளிக்கிழமை வரையிலுமாக நாட்டின் கோதுமை கொள்முதல், 3.81 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட கொள்முதலை விட, 34 சதவீதம் (2.83 கோடி டன்) அதிகமாகும்.நடப்பு வேளாண் பருவத்தில், கோதுமை உற்பத்தி, 9 கோடி டன்னை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு, இந்திய உணவு கழகம் (எப்.சி.ஐ.) மற்றும் மாநில அரசுகளின் முகமை அமைப்புகள் மூலம் கோதுமையை கொள்முதல் செய்து வருகிறது. கோதுமை உற்பத்தி அதிகரித்ததையடுத்து, இந்திய உணவு கழகம் கையிருப்பில், 5 கோடி டன் கோதுமை உள்ளது.மதிப்பீட்டு காலத்தில், மத்திய பிரதேசத்தின் கோதுமை கொள்முதல், 50 லட்சம் டன்னிலிருந்து, 85 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில், இதன் கொள்முதல் முறையே, 1.28 கோடி டன் மற்றும் 86 லட்சம் டன் என்றளவில் உள்ளது.

# முட்டை விலை 270 காசாக குறைப்பு

ஜூலை 15,2012,00:55



நாமக்கல்:நாமக்கல்லில் நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டை விலையை 15 காசுகள் குறைத்து, 270 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.இது குறிந்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின், நாமக்கல் மண்டல தலைவர் டாக்டர் செல்வராஜ் கூறியதாவது:வட இந்தியாவில் ஸ்ராவன் பண்டிகை கொண்டாடப்படுகிறது. எனவே, அங்கு முட்டை நுகர்வு குறைந்துள்ளது.
இதனால், ஐதராபாத், பர்வாலா மற்றும் ஹோஸ்பெட் உள்ளிட்ட மண்டலங்களில் முட்டை விலை குறைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:சென்னை 295 காசு, பெங்களூரு 280, மைசூரு 280, ஐதராபாத் 265, மும்பை 295, விஜயவாடா 265, கோல்கட்டா 300, பர்வாலா 248, டில்லி 267 காசு, என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கறிக்கோழி விலை, 60 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## சாம்பல் நோய் தாக்குதலால் ரோஜா உற்பத்தி பாதிப்பு

ஜுலை 15,2012,01:02



ஓசூர்: ஓசூர் தாலுகாவில் கடும் வறட்சியால், ரோஜா செடிகளில் சாம்பல் நோய் தாக்கி, மலர் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகாவில் காணப்படும் நல்ல செம்மண் வளம், குளிர்ந்த சீதோஷ நிலையை பயன்படுத்தி, விவசாயிகள் ரோஜா, அலங்கார மலர்கள், மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

ஸ்திரேலியா:இங்கு உற்பத்தியாகும் ரோஜா மலர்கள், ஆண்டு முழுவதும் மலேசியா, இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் ஏற்றுமதியாகிறது.காதலர் தினம், கிறிஸ்துமஸ் உள்ளிட்ட வெளிநாடுகளில் பிரபலமாக கொண்டாடப்படும் விழாக்கள் நேரத்தில், பல லட்சம் மலர்கள் ஏற்றுமதியாகின்றன. இரு ஆண்டாக, ஓசூர் பகுதியில் நிலவும் மாறுபட்ட தட்பவெப்ப நிலை, அதிக அளவில் ரசாயன உரங்களை பயன்படுத்தியதால், மண்ணின் தன்மையில் ஏற் பட்டுள்ள மாறுபாடு மற்றும் வறட்சியால் சாகுபடி பரப்பு குறைந்து, மலர் உற்பத்தியும் குறைந்துள்ளது.ஓசூர் தாலுகாவில் கடந்தாண்டு, வடகிழக்கு பருவமழை முற்றிலும் ஏமாற்றியது. தற்போது பெய்ய வேண்டிய, தென்மேற்கு பருவமழையும் தாமதமாகி வருகிறது.

சொட்டு நீர் பாசனம்:அதனால், ஓசூர் பகுதியில் கடும் வறட்சியால் ஆழ் துளை கிணறுகள் வறண்டன. பொதுவாக ரோஜா செடிகளுக்கு, ஆழ்துளை கிணறுகளில் இருந்து, சொட்டு நீர் பாசனம் மூலமே, நீர் பாசனம் நடக்கிறது.தற்போது, ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், பசுமை குடோன் அமைத்த விவசாயிகள், ரோஜா செடிகளை காப்பாற்ற லாரிகளில் தண்ணீர் எடுத்து வந்து, தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.வெப்பத்தின் தாக்குததால் ரோஜா செடிகளில், சாம்பல் நோய், 'த்ரிப்ஸ்' ஆகிய இரு நோய்கள் வேகமாக பரவி வருகின்றன. இந்த

நோய்களை கட்டுப்படுத்த முடியாமலும், செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமலும், விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

மலர் ஏற்றுமதி:ஓசூரை சேர்ந்த மலர் ஏற்றுமதியாளர்கள் கூறியதாவது:இந்த நோய் தாக்குதலால் இலைகள், மொட்டுகள் கருகி, கீழே உதிர்ந்து விடுகின்றன. உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் மாதந்தோறும், 50 லட்சம் மலர்களும், காதலர் தினத்தையொட்டி, ஒரு கோடி மலர்களும் ஏற்றுமதியானது. தற்போது, மாதம், 5 லட்சம் மலர்கள் ஏற்றுமதி ஆவதே அபூர்வமாக உள்ளது என்றார்.

### அவலூர்பேட்டை பகுதியில் வேர்க்கடலை விதைப்பு பணி

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,03:41 IST

அவலூர்பேட்டை:அவலூர்பேட்டை பகுதியில் மானாவரி வேர்க்கடலை சாகுபடிக்கான விதைப்பு பணிகள் துவங்கியது.இந்தாண்டு பருவ மழை பெய்வது தாமதம் ஆனதால், விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். ஆண்டு தோறும், வைகாசி மாதம் 15ம் நாளில் மானாவரி வேர்க்கடலை பயிருக்காக, விதைப்பு பணிகளை துவக்கி விடுவர்."ஆடிப்பட்டம் தேடி விதை' என்பதற்கு ஏற்ப ஆடி 15ம் தேதி வரை பல வகையான தானியங்களையும் விதைக்கின்றனர். தற்போது அவலூர்பேட்டை பகுதியில் இரண்டு தினங்களாக இரவு நேரத்தில் திடீர் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மழை இல்லாமல் மானாவரி வேர்க்கடலை பயிர் வைப்பதற்காக காத்திருந்த பல விவசாயிகள், தற்போது பெய்த மழையைப் பயன்படுத்தி உழவு செய்து, வேர்க்கடலை விதைகளை போடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

### அதிக பயிர்க் கடன் வழங்கிமாநில அளவில் முதலிடம் பெற வேண்டும்

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,03:34 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம்:விழுப்புரத்தில் வங்கியாளர்களுக்கான, ஆய்வுக் கூட்டம் கலெக்டர் சம்பத் தலைமையில் நடந்தது.கூட்டத்தில், வங்கிகளில் அரசு சார்ந்த திட்டங்கள் குறித்தும், காலாண்டு முன்னேற்றம் பற்றியும் கலெக்டர் சம்பத் ஆய்வு செய்து பேசியதாவது:இந்த நிதியாண்டில், கடந்த ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை முதல் காலாண்டில் தேசிய வங்கிகள், தனியார், கூட்டுறவு வங்கிகள் மூலமாக 26 ஆயிரத்து 861 விவசாயிகளுக்கு, இதுவரை 136 கோடி ரூபாய் பயிர் கடன்

வழங்கப்பட்டுள்ளது.வேளாண் கடன்களுக்காக, நகைகள் அடமானத்தின் பேரில் 13 ஆயிரத்து 342 விவசாயிகளுக்கு 66 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 671 பேருக்கு 6 கோடி ரூபாயில் குறுகிய கால கடன்களும், 25 கோடி ரூபாயில் வேளாண் கடனும் வழங்கப்பட்டுள்ளது.வங்கிகள் பயிர்க் கடன்கள், பயிர் கடன் சார்ந்த நகைக் கடன், மகளிர் குழுக் களுக்கான கடன்கள் வழங் குவதிலும், மாவட்ட தொழில் மையம் மற்றும் தாட்கோ திட்டங்களுக்கான கடன்களையும் உடனுக்குடன் பரிசீலித்து காலாண்டு குறியீட்டை நிறைவு செய்ய வேண்டும். நடப்பு நிதியாண்டில், இரண்டாவது காலாண்டு துவங்கியுள்ள இந்நேரத்தில் ஆடிப்பட்டம் துவங்க உள்ளதால் விவசாயிகளுக்கு நிறைய வேளாண் கடன்கள் தேவைப்படுகிறது.வங்கியாளர்கள் உரிய காலத்தில், வேளாண் கடன் களை பரிசீலனை செய்து வழங்க வேண்டும். வேளாண் உற்பத்தியில் மாவட்டம் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக விளங்கிட, வங்கியாளர்கள், விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாநிலத்தில் விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் தான், அதிக அளவிலான வங்கி கடன்களை பெற்று, பயனடைந்துள்ளனர் என்ற நிலையை வங்கியாளர்கள் உருவாக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் சம்பத் பேசினார்.இந்தியன் வங்கி உதவி பொதுமேலாளர் உலகன், முன்னோடி வங்கி மேலா ளர் பாலச்சந்திரன், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் விக்ரமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பசுமை குடில் அமைத்து நீடித்த கரும்பு சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,03:26 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம்:முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் பசுமை குடில் அமைத்து நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறை முகாம் நடந்தது.விழுப்புரம் அடுத்த பிடாகத்தில் தமிழக அரசின் திட்டமான பசுமை குடில் அமைத்து நீடித்த கரும்பு சாகுபடி முறை முகாம் நடந்தது. பிடாகத்தை சேர்ந்த தண்டபாணி என்பவரது நிலத்தில் முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் நடந்த முகாமை வேளாண் இணை இயக்குனர் சேகர் துவக்கி வைத்தார். உதவி வேளாண் இயக்குனர் செல்வசேகரன், வேளாண் அலுவலர் அரிகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர்.ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை துணை பொதுமேலாளர் (விரிவாக்கம்) லட்சுமணன், கரும்புத்துறை தலைவர் சங்கரலிங்கம் ஆகியோர் நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து சிறப்புரை யாற்றினர்.உதவி மேலாளர் சிவ சண்முகம் நன்றி கூறினார்.

## விற்பனைக்கு குவிந்த "ரோஜா செடிகள்'

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,03:22 IST

கருத்தை பதிவு செய்ய

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் விற்பனைக்காக ஓசூர் பகுதியில் இருந்து ரோஜா செடிகள் கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளது.கள்ளக்குறிச்சி அரசு கல்லூரி எதிரே பல வண்ண ரோஜா செடிகள் விற்பனைக்காக குவித்து வைத்துள்ளனர். ஒசூருலிருந்து மொத்த விலைக்கு வாங்கி வந்து செடி ஒன்று 25 ரூபாய் என விற்பனை செய்து வருகின்றனர். மழைக்காலம் துவங்கியதால் செடிகள் நன்கு வளரும் என்பதால் பொதுமக்கள் ஆர்வமுடன் ரோஜா செடிகளை வாங்கி செல்கின்றனர்.

## 2 நாட்களாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,07:39 IST

கருத்தை பதிவு செய்ய

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்ததால், கோதுமலை வனப்பகுதி நீரோடைகளில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் நிரம்பின.

வாழப்பாடி அடுத்த ஐந்தாவது கி.மீ., தூரத்தில், கோதுமலை அமைந்துள்ளது. எந்த மலைத்தொடர்களிலும் தொடர்பின்றி தனித்து காணப்படும் அந்த மலையை சுற்றி முத்தம்பட்டி, மன்னாயக்கன்பட்டி, மாரியம்மன்புதூர், நீர்முள்ளிக்குட்டை, சந்திரபிள்ளைவலசு, சேசன்சாவடி உள்ளிட்ட கிராமங்கள் அமைந்துள்ளன.கோதுமலை அடிவாரத்திலுள்ள மாரியம்மன்புதூர் கிராமத்தில், மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்டத்தின் கீழ், எட்டு ஆண்டுகளுக்கு முன் காடுவளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் கோதுமலை வனப்பகுதியில், மரக்கன்றுகள் நடப்பட்டதோடு, நீரோடைகளின் குறுக்கே தடுப்பணைகளும் கட்டப்பட்டது. மூன்றாண்டுகளாக, கோதுமலை வனப்பகுதியில் மழையில்லாததால், தடுப்பணைகள் நீர்வரத்தின்றி வறண்டு கிடந்தன. இரு தினங்களாக, இரவு நேரத்தில் பலத்த மழை பெய்து வருவதால், கோதுமலை நீரோடை தடுப்பணைகள் நிரம்பி வருகின்றன."தடுப்பணைகள் நிரம்பியதால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தரமான விதை உற்பத்தி குறித்து தொழில் நுட்ப பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,07:48 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: அட்மா திட்டத்தின் கீழ், விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை சார்பில், தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கு தொழில் நுட்ப நடைமுறை குறித்த பயிற்சி முகாம், பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் நடந்தது.

நாமக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) முரளிதரன் தலைமை வகித்து பேசுகையில்,""வேளாண் உற்பத்திக்கு முக்கியமாக ஏழு இடுபொருட்கள் தேவை; அதில் தலையாயது, தரமான விதை. நல்ல தரமான விதை என்பது, சிறந்த முளைப்புத் திறன் கொணடதாகவும், அளவான ஈரப்பதம் உடையதாகவும் இருக்கும்," என்றார்.வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் பேசும்போது,""தரமான விதை உற்பத்தியின் நோக்கம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் அவசியம் பற்றி அறிந்து, விதைப்பண்ணை விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளை, சக விவசாயிகளும் வாங்கி பயன்படுத்துகின்றனர். அதை உணர்ந்து, தரமான விதையை உற்பத்தி செய்து வழங்க வேண்டும்," என்றார்.

விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) அசோக்குமார், வேளாண் அலுவலர் ராமச்சந்திரன், விதைச்சான்று அலுவலர்கள் முருகேசன், கந்தசாமி ஆகியோர் தத்தமது துறைகளில் உள்ள திட்டங்கள், பயன்கள் குறித்து எடுத்துரைத்தனர்.திருச்செங்கோடு, பள்ளிபாளையம் வட்டாரத்தை சேர்ந்த விதைப்பண்ணை விவசாயிகள், தனியார் விதை உற்பத்தியாளர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை, உதவி விதை அலுவலர்கள் ராமசாமி, அருள்மொழிவர்மன், ராஜா ஆகியோர் செய்திருந்தனர்.

## வறண்ட வாணியாறு அணை: விவசாயம் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,06:45 IST

கருத்தை பதிவு செய்ய

பாப்பிரெட்டிப்பட்டி:" பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த வாணியாறு அணை வறண்டு போயுள்ளதால் அந்த பகுதி விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.சேலம் - தர்மபுரி மாவட்ட எல்லையில் பாப்பிரெட்டிப்பட்டி அருகே மூன்று கி.மீ., தொலைவில் ஏற்காடு சேர்வராயன் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது வாணியாறு அணை. இந்த அணை 1985ம் ஆண்டு திறக்கப்பட்டது. இதில், 65 அடி தண்ணீர் தேக்கி வைக்க முடியும்.இதன்மூலம் மோளையானூர்,

வெங்கடசமுத்திரம், மெணசி, ஜம்மனஅள்ளி, கோழிமேக்கனூர், பாப்பிரெட்டிப்பட்டி, அலமேலுபுரம், அதிகாரப்பட்டி, தாதம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி என, 15 கிராமங்களில், 10 ஆயிரத்து 517 ஏக்கர் நிலம் ஆண்டுதோறும் பாசன வசதி பெறுகிறது.தற்போது பருவமழை பொய்த்து போனதால் ஏற்காடு மலை பகுதியில் மழை பெய்யாததாலும் வாணியாறு அணைக்கு நீர்வரத்து இல்லாமல் போனது. தற்போது வாணியாறு அணை வறண்டு போய் மேய்ச்சல் காடாக மாறியுள்ளது. இந்த அணைக்கு ஆடி பெருக்கு விழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் ஏராளமானோர் அணையில் குளிக்க வருவதுண்டு.ஆனால், தற்போது அணையில் தண்ணீர் குறைந்து, 24 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. அதனால் மக்கள் அணையில் குளிக்க முடியாத நிலை உள்ளது. இதனால் விவசாயமும் பாதிக்கப்பட்டதால் அந்த பகுதி விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். வறட்சியின் பிடியில் உள்ளதாலும் தண்ணீர் வரத்து இல்லாததாலும் வாணியாறு அணை வறண்டு காணப்படுகிறது. தற்போது மீன் வளர்க்கப்பட்டு வருகிறது. பாதியளவுக்கு மேல் குறைந்திருந்ததால் விவசாயிகள் அணையில் மாடு ஆடு மேய்க்கும் மேய்ச்சல் காடாக மாறி உள்ளது. தென்மேற்கு பருவமழை பெய்தால் மட்டுமே அணை நிரம்ப வாய்ப்புள்ளதால் அந்த பகுதி விவசாயிகள் பருவ மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.

**வாழையை தாக்கும் இலைப்புள்ளி நோய்:கா.பட்டணம் விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,06:56 IST

கிருஷ்ணகிரி

காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையில், இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகம் உள்ளதால், விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.மலைகள் சூழ்ந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மா அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. அதேபோல், வாழை பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, ஓசூர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை மற்றும் காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில், 2,500 ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.பெரும்பாலும், "ஜி9' ரகத்தை சேர்ந்த பச்சை வாழை மற்றும் பூவாழை, ஏலக்கி அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. சமீபகாலமாக திசு வளர்ப்பு மூலம் வளர்க்கப்படும் வாழை சாகுபடி அதிகரித்துள்ளது. சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படும் திசு வாழை சாகுபடியில், ஒரு ஏக்கரில், இரண்டு லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு கிடைக்கிறது.நாட்டு ரக வாழை சாகுபடியில், "சக்கர்ஸ்' எனப்படும் கிழங்கு மூலம் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு உபயோகப்படுத்தப்படும் கிழங்கில், நோய்கள் தாக்குதல் இருந்தால், அதிலிருந்து வளரும் புதிய செடிகளிலும் நோய் தாக்குதல் ஏற்படும். இந்த வகை வாழையில், நோய் எதிர்ப்பு தன்மை குறைந்து காணப்படுவதால், எளிதில்

நோய்கள் பரவுகிறது.தற்போது, காவேரிப்பட்டணம் சுற்று வட்டார பகுதியில் சாகுபடி செய்யபட்டுள்ள வாழையில், இலைப்புள்ளி நோய் தாக்குதலும், சிறு இலை வைரஸ் நோய் தாக்குதலும் அதிகம் காணப்படுகிறது."சிக்கடோக்கா' எனப்படும் பூஞ்சையால் ஏற்படும் இலைப்புள்ளி நோய் தாக்கிய வாழைச் செடியில், இலைகள் கருகி, செடிகள் அழியும் நிலையில் உள்ளது. இதனால், வாழை விளைசல் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறையினர் கூறியது:பொதுவாக, நாட்டு ரக வாழையில் மட்டுமே நோய் தாக்குதல் அதிகம் இருக்கும். "சக்கர்ஸ்' எனப்படும் ஒரு கிழங்கு, இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. திசு வளர்ப்பில் ஒரு வாழைச் செடி, 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை குறைவாக கிடைப்பதால், பெரும்பாலான விவசாயிகள், கிழங்கை வாங்கி, வாழை சாகுபடி செய்கின்றனர்.காற்றின் மூலம் பரவும் இலைப்புள்ளி நோய் தாக்கிய இலைகளை முற்றிலும் அகற்றி எரிக்க வேண்டும். மேலும், "மோனோகுரோட்டோபாஸ்' மற்றும் "கார்பண்டாசிம்' மருந்து ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு கிராம் கலந்து நோய் பாதித்த இலைகளின் மேல் தெளிக்கலாம்.அல்லது, "கார்பண்டாசிம்' மாத்திரைகளை நோய் தாக்கிய வாழை மரத்தின் கிழங்கில், ஓட்டை போட்டு உள்ளே வைக்க வேண்டும். இந்த மருந்து, தண்ணீரில் கரைந்து வேர் மூலம் சென்று நோயை கட்டுப்படுத்தும். அல்லது மருந்தினை ஊசி மூலம் கிழங்கில் செலுத்தலாம்."சிக்கடோக்கா' பூஞ்சைகள் காற்றில் பரவும் தண்மை கொண்டதால், ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாடு முறைகளை விவசாயிகள் கையாண்டால் மட்டுமே நோயை கட்டுப்படுத்த முடியும். நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க, விவசாயிகள் நோய் எதிர்ப்பு தன்மை அதிகம் உள்ள திசு வளர்ப்பு வாழை செடிகளை பயன்படுத்த வேண்டும்.

## மானிய விலையில் ஸ்பிரேயர் விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : ஜுலை 16,2012,07:54 IST

காங்கேயம்: ""காங்கேயம் வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் ஸ்பிரேயர் வழங்குவதாக'', வேளாண் உதவி இயக்குனர் அரசப்பன் கூறினார்.மேலும், அவர் கூறியதாவது: காங்கேயம் வட்டார விவசாயம் வறட்சிக்குட்பட்ட பகுதியாக உள்ளது. கிணற்று பாசனம் உள்ள பகுதிகளில் தென்னை பிரதான பயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது கூலி ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதால், தென்னையில் விவசாயிகள் களைக்கொல்லி அதிகளவு பயன்படுத்துகின்றனர்.களைக்கொல்லி தெளிக்க விசை தெளிப்பான் தேவைப்படுகிறது. தற்போது வேளாண் துறையின் மூலம் மானிய விலையில் தெளிப்பான்கள், விசை தெளிப்பான்கள் வழங்கப்படுகிறது. தற்போது, வேளாண் துறையின் மூலமாக எண்ணெய் வித்து உற்பத்தி திட்டம்

மூலம் கைத்தெளிப்பான்கள் மற்றும் விசைத்தெளிப்பான்கள் மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள, அவர் கேட்டுக் கொண்டார்.

### அவரை விலை சரிவு விவசாயிகள் ஏமாற்றம்

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,01:40 IST

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் அவரை சீசன் துவங்கியது முதல் நல்ல விலை கிடைத்த நிலையில் தற்போது விலை வீழ்ச்சியடைந்துள்ளது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.
சில மாதங்களுக்கு முன் அவரை சீசன் துவங்கியது. சராசரியாக ஒரு கிலோ 30 முதல் 40 ரூபாய் வரை விற்றது. நோய் பரவலை தடுக்க தடுப்பு நடவடிக்கை, உரமிடல் என செலவு அதிகமான நிலையில் இந்த விலை விவசாயிகளுக்கு கணிசமான லாபத்தை தந்தது.இந்நிலையில் ஜூன் இறுதி முதல் திடீர் விலை சரிவை சந்தித்து வருகிறது. ஒரு கிலா தற்போது 5 முதல் 10 ரூபாய் வரை விற்பனையாகிறது. இது விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையில்லாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அவரை பறிக்கும் கூலி கூட கட்டுபடியாகாத நிலையில், பறிக்காமலேயே செடிகளிலே விட்டுள்ளனர். விவசாயிகளின் நிலை இவ்வாறு இருக்க வியாபாரிகள் விலையை குறைக்காததால் நகர்பகுதி சந்தைகளில் அவரை விலை குறையவில்லை.

### தென்னையில் வண்டு தாக்குதல் விவசாயிகளுக்கு ஆலோசனை

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,01:36 IST

---

கருத்தை பதிவு செய்ய

ரெட்டியார்சத்திரம்: தென்னை சாகுபடியில் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த, தோட்டக்கலைத் துறையினர் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.
ரெட்டியார்சத்திரம் வட்டார உதவி இயக்குனர் கணேசன் கூறியதாவது: தலா 10 மில்லி மானோகுரோடோபாஸ், தூய தண்ணீர் கரைசலை, பாலித்தின் பையில் தயார்படுத்தவேண்டும். மரத்தில் உள்ள முற்றிய காய்களை அகற்றியபின், இளம்வேரை தேர்வு செய்து சாய்வாக வெட்ட வேண்டும். பாலித்தின் பாக்கெட்டை, வெட்டுப்பட்ட பகுதியில் வைத்துக்கட்ட வேண்டும். அடுத்த 24 மணிநேரத்தில், வேதிப்பொரும் மரம் முழுவதும் பரவும். இதையடுத்து, மரத்தை தாக்க வரும் சிவப்புக் கூன் வண்டுகள் அழிந்து விடும்.

ஒரு லிட்டர் தண்ணீரில், ஒரு கிலோ ஆமணக்கு புண்ணாக்கினை மண்பானையில் கலந்து, தோப்பின் மைய பகுதியில் வைக்க வேண்டும். ஆமணக்கு வாசனையால் ஈர்க்கப்படும் காண்டாமிருக வண்டுகள், நீருள்ள மண்பானையில் விழுந்து அழியும். மேலும், வண்டுகள் கட்டுப்பாட்டு முறைகள் குறித்த விபரங்களுக்கு, வட்டார தோட்டக்கலை அலுவலகத்தை அணுகலாம், என்றார்.

**முருங்கைக்காய் விலை திடீர்வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,06:50 IST

கரூர்: முருங்கைக்காய்க்கு திடீரென ஏற்பட்ட விலைகுறைவால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.
கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி தாலுகா மற்றும் கரூர் தாலுகாவில் நல்லகுமரன்பட்டி, தாளப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் முருங்கைக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. அங்கு சாகுபடி செய்யப்படும் முருங்கைக்காய் தமிழகம் மட்டுமல்ல, வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.வழக்கமாக ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை முருங்கைக்காய் விளைச்சல் அதிமாக இருக்கும். குறிப்பாக ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் (ஆடி மாதம்) ஒரு மரத்தில் வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை முருங்கைக்காயை பறிக்கும் அளவுக்கு உற்பத்தி இருக்கும். ஆடி மாதம் துவங்கி விட்டதால், அரவக்குறிச்சி மற்றும் கரூர் பகுதிகளில் முருங்கை உற்பத்தி களை கட்ட துவங்கியுள்ளது. ஆனால் அதேசமயம் முருங்கைக்காயின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.
"கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கைக்காய் 18 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது 10 ரூபாய் முதல் 12 ரூபாய் வரைதான் முருங்கைக்காய் விலை போகிறது. ஒரு முருங்கைக்காய் ஒரு ரூபாய்க்கு மலிவாக கிடைக்கிறது.
பொதுவாக ஆடி மாதத்தில் திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் அதிகளவில் நடக்க வாய்ப்பில்லை. உற்பத்தி அதிகரித்து வரும் நிலையில், வரும் நாட்களில் முருங்கைக்காய் விலை மேலும் குறையும்' என வியாபாரிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

## காய்கறிகள் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,03:02 IST

காரைக்குடி: காரைக்குடி மார்க்கெட்டில் காய்கறிகள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. மதுரை, திருச்சியிலிருந்தும், அரியக்குடி, சாக்கோட்டை பகுதிகளில் இருந்து காரைக்குடி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்துகள் உள்ளன. காய்கறி விளைச்சல் இன்றி வரத்து குறைந்துவிட்டன. இதனால், விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளன. கடந்த வாரம் ரூ.24க்கு (கிலோ) விற்ற தக்காளி, உருளைகிழங்கு, ரூ.30 ஆக உயர்ந்துவிட்டன. பெரிய வெங்காயம் ரூ.12லிருந்து 16, சின்ன வெங்காயம் ரூ.30 லிருந்து 40, காலிபிளவர் ஒன்று 15 லிருந்து 25 வரையும், பீன்ஸ் 40, கேரட் 40 ஆக உயர்ந்துள்ளன. அவரைக்காய் (பிஞ்சு அவரை) கிலோ ரூ.14, மிளகாய் ரூ.40க்கும் விற்கிறது.
வியாபாரி ஜெயராம் கூறுகையில், "சீசன் இல்லாததால், காய்கறிகள் விலை உயர்கிறது. விளைச்சல் இன்றி, வரத்து குறைந்துள்ளதால் அதிகரித்துள்ளன, என்றார்.

## மாணவிகளுக்கு வாழைஅடர்நடவு பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,06:50 IST

குளித்தலையில் 15 கல்லூரி மாணவிகளுக்கு வாழையில் அடர்நடவு முறை குறித்த பயிற்சி முகாம் நடந்தது.தமிழக ஊரக வேளாண்மை பயிற்சி திட்டத்தின்கீழ் 15 கல்லூரி மாணவிகளுக்கு வாழையில் அடர்நடவு முறை குறித்த பயிற்சி முகாம் குளித்தலையில் நடந்தது. முகாமில் விவசாயி செந்தில் என்பவரது தோட்டத்தில் இயற்கை விவசாயம் செய்யும் முறை, பசுந்தாள் உரங்களை பயன் படுத்துவதன் மூலம் வாழையில் உற்பத்தியை பெருக்குவது குறித்த வழிமுறைகள் மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் சுகந்தி, சூர்யா, வாசுகி, விஜயலட்சுமி, வித்யா உள்பட 15 மாணவிகள் பங்கேற்றனர். அதேபோல் கிராமியம் தொண்டு நிறுவனத்தில் சமூகப்பணி குறித்து இயக்குனர் நாராயணனும், மகளிர் குழுவின் வளர்ச்சி, மகளிர் குழுவுடன் வங்கி நடவடிக்கையில் ஈடுபாடு, மகளிர்கள் சுயஉதவிக்குழுவின் மூலம் பொருளாதார முன்னேற்றம் குறித்து மாநில பயிற்றுநர் கருப்பண்ணனும் விளக்கி பேசினார்.

தினகரன்

புதிய ரக தென்னை அறிமுகம் வேளாண் மாணவர்கள் விளக்கம்

பதிவு செய்த நேரம்:2012-07-16 10:10:06

தர்மபுரி, : தர்மபுரி அருகே புதிய ரக தென்னை குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.
தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தில் கோவை வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் இளநிலை வேளா ண்மை மாணவர்கள் கடந்த 16ம் தேதி முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி ஆகஸ்ட் 18ம் தேதி வரை நடக்கிறது. இவர்கள் மாவட்டத்தில் பல பிரிவுகளாக பிரிந்து விவசாயிகளுக்கு விவசாய தொழில் நுட்பங்களை கற்று தருகின்றனர்.
இந்நிலையில், பாலக்கோடு அணி மாணவர்கள் கோட்டூர் கிராம விவசாயிகளுக்கு பயிர் வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் அதனை பயன்படுத்தும் முறை பற்றி விளக்கி கூறினர். தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு புதிய ரகமான தென்னை டானிக் என்ற ரகத்தை பற்றி எடுத்து கூறினர். இந்த புதிய ரக தென்னையை பயிரிட விருப்பும் விவசாயிகள் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தை அணுகும்படி விவசாயிகளிடம் எடுத்து கூறினர்.

முன் சம்பா பருவத்திற்கு நீண்ட கால ரக நெல்லை விவசாயிகள் பயிரிடலாம் சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அறிவுரை

பதிவு செய்த நேரம்:2012-07-16 10:37:35

நாகை, : முன் சம்பா பருவத்திற்கு நீண்ட கால ரக நெல்லை விவசாயி கள் பயிரிடலாம் என்று வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அறிவுறுத்தி உள்ளார்.
இதுகுறித்து சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ராஜேந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:
காவிரி டெல்டா பகுதி யில் நெல் சாகுபடி செய்துவரும் விவசாயிகள் ஆழ்குழாய் கிணற்று பாசன

வசதியுள்ள விவசாயிகள் முன் சம்பா பருவத்திற்கு ஏற்ப நெல் ரகங்களை தேர்வு செய்து நடவு செய்யலாம். குறிப்பாக முன்சம்பா பருவத்திற்கு நீண்ட கால ரகங்களான சி.ஆர். 1009, ஆடுதுறை 44, ஆடுதுறை 50 என்ற பெயரில் புதிய ரகமாக வெளியிடப்பட உள்ள எடி2235 சாகுபடி செய்து பயன் பெறலாம்.

மேலும் தண்ணீர் தாமதமாக கிடைத்து பற்றாக்குறையான சூழ்நிலையில் பின் சம்பா பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்ய வேண்டும். பின்சம்பா பருவத்திற்கு 135 நாட்கள் வயதுடைய மத்திய கால ரகங்களான ஆடுதுறை 38, ஆடுதுறை 39 (125 நாட்கள்), ஆடுதுறை 46, ஆடுதுறை 49, கோ 43, கோ 49, கோ 50 மற்றும் வெள்ளை பொன்னி ஆகிய ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்யலாம். களர், உவர் நிலங்களில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் களர், உவர் தன்மையை தாங்கும் தன்மை கொண்ட புதிய ரகமான திருச்சி 3ஐ சாகுபடி செய்யலாம். மேலும் நீர் தேங்கும் பள்ளக்கால் பகுதிகளில் வெள்ள நீரை தாங்கி வளரக்கூடிய ரகமான சுவர்ணா சப்1 (140 நாட்கள்) என்ற ரகத்தை சாகுபடி செய்து பயன்பெறலாம். கடந்த ஆண்டு சுவர்ணா சப் 1 ரக விதைகள் பரவலாக்கம் செய்வதற்காக 50க்கும் மேற் பட்ட விவசாயிகளிடம் வழங்கப்பட்டது.

விதைகளை 3 ஆண்டிற்கு விவசாயிகளே உற்பத்தி செய்து விதைப்புக்கு பயன்படுத்தி கொள்ளலாம். இத்தகவலை சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## டெல்டா பாசன குறுவை விவசாயிகளுக்கு வறட்சி கால நிவாரணம்

பதிவு செய்த நேரம்:2012-07-16 11:48:13

கடலூர், : டெல்டா பாசன குறுவை பயிர் விவசாயிகளுக்கு வறட்சிகால நிவாரண உதவி வழங்க வேண்டுமென கடலூர் மாவட்ட ஊழவர் மன்றங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அதன் தலைவர் கீழ்அணுவம்பட்டு ரவீந்திரன் மற்றும் நிர்வாகிகள் மத்திய மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது-

வடதமிழ் நாட்டில் தற்போது பெய்து வரும் மழை பருவமழை அல்ல. வெப்பசலனத்தால் உருவான மழை. இது விவசாயத்திற்கு போதுமானதல்ல. வழக்கமாக தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் வாரத்தில் தொடங்கி 76 நாட்கள் வரை பெய்யும். மேலும் இத்துடன் பாசனத்திற்காக மேட்டூர் அணையின் தண்ணீரும் கிடைக்கும். இவற்றை பயன்படுத்தி தமிழ்நாட்டின் பத்து டெல்டா மாவட்டங்களில் 5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடியும் அதனை தொடர்ந்து 16 லட்சம் ஏக்கரில் சம்பா பயிரிடும் பணியும் நடைபெறும்.

நடப்பாண்டில் தென் மேற்கு பருவமழை பொய்த் து போனது விவசாயிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜூலை மாதமாகியும் பருவமழைக்கான அறிகுறிகள் இல்லை. அதே நேரம்

இடைக்கால தீர்ப்பினை கர்நாடக அரசு அமல்படுத்தாததால் அணையில் போதுமான நீர் வரத்தும் இல்லை. இதன் காரணமாக டெல்டா மாவட்டங்களில் இந்த ஆண்டு ஒரு லட்சம் ஏக்கருக்கு குறைவாகவே குறுவை சாகுபடி நடந்துள்ளது. அதனை தொடர்ந்து சம்பா பயிரிடவும் விவசாயிகள் உறுதியற்ற நிலையில் உள்ளனர். கடலூர் மாவட்ட டெல்டா பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரும் இதர பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கரும் குறுவை பயிரிடப்படும். பருவமழையில்லாததால் டெல்டா பகுதிகளில் 3 ஆயிரம் ஏக்கர் அளவே பயிரிடப்பட்டுள்ளது. இதர பகுதிகளில் 1400 ஏக்கர் அளவிற்கு குறுவை பயிரிடப்பட்டுள்ளது. மழை பொய்த்து போனதாலும் காவிரி தண்ணீர் உரிய காலத்தில் கிடைக்காததாலும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக இந்த ஆண்டு உணவுதானிய உற்பத்தி மிகவும் குறையும் என அஞ்சப்படுகிறது. தென்மேற்கு பருவமழை மற்றும் காவிரிநீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா பாசன குறுவை விவசாயிகளுக்கு வறட்சி கால நிவாரண உதவித்தொகையை மத்திய மாநில அரசுகள் வழங்க வேண்டும். இடைக்கால தீர்ப்பின் படி காவிரியில் தண்ணீர் திறந்துவிடச்செய்து சம்பா பயிரிடும் டெல்டா விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் விவசாயத்தை பாதுகாக்க மத்திய மாநில அரசுகள் செயல்பட வேண்டும்.

## விதை வாங்கும் விவசாயிகள் கட்டாயம் ரசீது பெற வேண்டும் வேளாண் அதிகாரி அறிவுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-07-16 10:54:48

நாமக்கல், : விதை வாங்கும் விவசாயிகள் கட்டாயம் ரசீதை கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வேளாண் அதிகாரி கூறினார். நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் விவசாயிகள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு விதைசான்று நடைமுறை குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண் துணை இயக்குனர் நடராஜன் பயிற்சி முகாமை தொடங்கி வைத்தார். அவர், தரமான விதை உற்பத்தியின் முக்கியத்துவம், இயற்கை வேளாண்மையின் முக்கியதுவம் பற்றி பேசினார். சந்தியூர் வேளாண் பல்கலை கழக இணை பேராசிரியர் ஜெகதாம்பாள், வேளாண்மை அறிவியல் நிலைய செயல்பாடுகள் குறித்து விளக்கினார். விதை சான்று உதவி இயக்குனர் சுப்பிரமணியம் பேசுகையில், விவசாயிகள் விதை வாங்கும் போது, காலாவதியாகி விட்டதா என்பதை கவனித்துப் பார்த்து வாங்க வேண்டும். விதைக்கான ரசீது அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டும். வேளாண் சாகுபடிக்கு தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்க விதை சான்று துறை தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார். விதை பகுப்பாய்வாளர் சாரதா, திருச்செங்கோடு விதை ஆய்வாளர் ராஜேந்திரன், விதைசான்று அலுவலர்கள் கந்தசாமி, முருகேசன், துணை வேளாண்மை அலுவலர் மாதேஸ்வரன், விதை உதவி அலுவலர்கள் குப்புசாமி, உதயபாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.